2013 *மார்ச் 27*]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஏற்கெனவே 300 வீடுகள் கட்டப்பட்டு அனைவரும் பத்திரம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுதும் வாடகை கொடுக்க முடியாத நலிவடைந்த மக்கள் நகரப் பகுதியில் இருப்பதனால் மீண்டும் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய அந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தில் வீடுகள் இல்லாது குடிசையில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழுகின்ற குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அங்கே இடம் கிடைத்தால் நிச்சயமாக அந்த நலிந்த பிரிவினருக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

வெற்றிலைக் கொடி

***4387—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மார்ச் 27

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் பகுதியில் வெற்றிலைக் கொடி பயிரிடுவதை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தான் பகுதியில் கொடிக்கால் வெற்றிலையைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் அரசு ஆவன செய்து வருகிறது.

சோழவந்தானில் வெற்றிலைக் கொடிக்காலைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக வெற்றிலைக் கொடிக்காலைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உரிய தொழில்நுட்பங்கள் களப்பணியாளர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் வெற்றிலை மகசூலை அதிகரிக்கவும், கொடிக்கால் வெற்றிலைச் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்கப்படுத்தி உரப் பரிந்துரைகள் மற்றும் பல்வேறு தொழில்நுட்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தமிழ்த் தாயே, அழகுமொழி உவமானப் பரம்பொருளே, தீச்சுடரே, வள்ளல் தலைவரின் வாசகத்தின் உட்பொருளே, கள்ளமற்ற தொண்டர்கள் நாளும் ஓதும் வேத வடிவே, உத்தமத் தலைவருடன் உழன்று திரிந்தோரை உரிய பெரியோராக்கி ஒன்றுகூட்டி வைத்தவரே, சுற்றமெலாம் தமிழரென அடைக்கலம் ஆனவரே, பெற்றவர் பேர் சொல்லும் பிள்ளையாய் இருப்பவரே, கவலைகளைத் தீர்த்துவிடும் கருணைத் தாயே, காரிருளில் தீச்சுடராய் ஒளிவீசும் ஜோதிச் சுடரே, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, அண்ணா பெயரைத் தாங்கி நிற்கும், கழகத்தை அடையாளம் காட்டும், அதன் இரட்டை இலைச் சின்னத்தை மங்காமல், மறையாமல், சிந்தாமல், சிதறாமல் எந்நாளும் காத்து நிற்கும் கழகக் காவல் தெய்வமே, புரட்சித் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

2013 மார்ச் 27]

இருண்டிருந்த தமிழகத்தில் ஏழைகளின் வான் நிலவாய், மண் குடிசைவாசிகளின் தென்றலாய், ஆதி திராவிடர் மக்களின் காவல் தெய்வமாய் தோன்றிவரும் தங்கத் தாரகையே, தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எதற்கும் அரசியல் ஆதாயம் தேடும் அசுரத்தனத்தைச் சூறையாடும் சிங்க நிகர் தாயே, எண்ணால், எழுத்தால், செயலால் எண்ணற்ற ஏழைகள் பயன்பட பண்பட்ட உள்ளத்தில் எண்ணங்களைத் திட்டமாக்கி ஆக்கப் பணிகளுக்கு அனுதினமும் ஊக்கம் கொடுக்கும் உத்தமத் தலைவியே! மாண்புமிகு அம்மா அவர்கள் வாழும் இந்த நன்னாளில் நானும் வாழ்வதை எண்ணி, கடைக்கோடியில் இருக்கும் என்னையும் இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர் என்ற முறையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் கேள்வி கேட்க வாய்ப்பளித்து, அதற்குப் பதில் பெறுவதற்கு வழி செய்ததற்காக கோடானுகோடி நன்றிகளைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதி முழுக்க, முழுக்க விவசாயம் நிறைந்த பகுதியாகும். அங்கு வெற்றிலை விவசாயம் அதிக அளவில் செய்யும் தொழிலாக இருந்து வருகிறது. வெற்றிலை சுப காரியங்களுக்குப் பயன்படுவதாகவும், மரியாதைக்குரியதாகவும், மருத்துவக் குணம் கொண்டதாகவும் இருந்துவருகிறது. தற்போது, அந்தத் தொழில் நலிவடைந்து வருவதால் விவசாயத்தையே நம்பியிருக்கும் கூலித் தொழிலாளர்களைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் பகுதியில் 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் வெற்றிலை கொடிக்கால் பயிருக்கான நடவுப் பொருட்கள் மற்றும் இடுபொருட்கள் வேண்டி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படாததால், இந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்த முடியவில்லை. எனினும், 2013–2014 ஆம் ஆண்டு விவசாயிகள் முன்வரும்பட்சத்தில் சோழவந்தான் பகுதியில் வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடி செய்ய தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அவர்களுக்குப் பல்வேறு இடுபொருட்களை மானியத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெற்றிலை விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய விவசாயிகளுடைய எதிர்காலம் பொதுவாகவே கேள்விக்குறியாக இருக்கிறது. சோழவந்தான் பகுதியில் மட்டுமல்லாமல், தேனி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரியகுளம், போடி, சின்னமனூர் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கடுமையான அளவுக்கு வாடல் நோய் பாதிப்பு இருக்கிறது. அதைப் போக்குவதற்கான புதிய மருந்துகளோ, கண்டுபிடிப்புகளோ இல்லை என்கிற சூழ்நிலையில் அந்த விவசாயத்தை நம்பியவர்களின் எதிர்காலம் மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.*

முற்பகல் 10—25

2001—இல் அமைந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு அப்போது ஏற்பட்ட வாடல் நோய்க்கு ஒரு எக்டேருக்கு 10,000 ரூபாய் கொடுத்து, ஜெயமங்கலம், பெரியகுளம் பகுதியிலுள்ள விவசாயிகளைப் பாதுகாத்தது. இன்றைக்கும் வாடல் நோய் என்பது ஒரு முற்றுப்பெறாத தொடர் கதையாக இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில்கூட இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது பல்வேறு விவாதங்கள் நடந்தன. பெரியகுளத்தில் இருக்கக்கூடிய விவசாய தோட்டக்கலை ஆராய்ச்சிப் பண்ணையில் நோய்கள் தடுப்பு, புதிய விதைகள் கண்டுபிடிப்பு போன்ற வேலைகள் நடக்கின்றனவென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால், நான் அறிந்த அளவில், அங்கு அதுபோன்ற பணிகள் நடக்கவில்லை. மொத்தத்தில் வெற்றிலை விவசாயம் என்பது மங்கலகரமான விவசாயம் என்பது

மட்டுமல்ல, வெற்றிலை பெரும்பகுதியான மக்களின் வாழ்க்கையில் உபயோகிப்பது. இன்றைக்கு அந்த தொழிலைச் செய்பவர்கள் அதைவிட்டு வெளியேறுகிற நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் இதன்மீது உரிய கவனம் செலுத்தி, வாடல்நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையும், உற்சாகமும் தருகிற விதத்தில் நிவாரணங்கள் கொடுத்து, புதிய விதைகளைக் கண்டுபிடித்து அந்த விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 155 எக்டேர் பரப்பில்தான் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நோயைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் திருச்சி மாவட்டம், சிறுகமணியில் உள்ள வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தில் 1983 ஆம் ஆண்டு முதல் வெற்றிலைக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேதான் புதிய இரகங்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளன.*

தமிழகத்திலே சுமார் 2,506 எக்டேர் பரப்பில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மூலமாக வெற்றிலையைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அவ்வப்போது தேவையான தொழில்நுட்பங்களும், பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*